# ம்ருச்சகடிகம்

சாருதத்தன் என்பவன் ஒரு வியாபாரி. மிகவும் செல்வந்தனாக இருந்து பல தான தர்மங்கள் செய்தவன், ஏழை எளியவருக்கு உதவியவன். ஆனால் இவ்வாறே அவனது செல்வம் தீர்ந்தது. தருமத்தால் ஏற்பட்ட அவனது வறுமையிலும் சிறிதும் முகம் சுளிக்காது அவனது மனைவி ஆர்யாதூதா என்பவள் குடும்பம் நடத்துகிறாள். ஒரே மகன் ரோஹஸேனன் என்பவன் சிறிய பாலகன்.

வறுமையில் சாருதத்தனது வருத்தம் ஒன்றே – “இந்த வீட்டுக்காரர் ஏழை, ஆகையால் அவர் வீட்டிற்குச் சென்று அவரை கஷ்டப்படுத்தவேண்டாம்” என்று அதிதிகள் வருவதில்லையாம். இன்றும் அவனுக்கு ஈகை குணம் குறையவில்லை. மைத்ரேயன் என்பவன் சாருதத்தனது நண்பன். அவனிடம் தனது மன வருத்தத்தை சாருதத்தன் சொல்லிக்கொள்கிறான். “தெய்வம் என்று ஒன்று இருக்குமானால் உன்னை இப்படி விட்டுவைக்குமா” என்று கேட்கிறான் மைத்ரேயன். “அப்படி நாம் கேட்கக்கூடாது, தெய்வம் உள்ளது, அது அருள் செய்யவேண்டிய நேரத்தில் செய்யும்” என்று கூறுகிறான் சாருதத்தன்.

வஸந்தஸேனா என்பவள் விலைமகள் குலத்தில் பிறந்தவள். ஆனால் குணத்தால் மிகவும் சிறந்தவள். உடம்பை விற்கும் எண்ணமற்றவள். அவள் ஒருமுறை சாருதத்தனை எதேச்சையாக சந்திக்கவே இருவருக்கும் பரஸ்பரம் அன்பு ஏற்படுகிறது. ஆகையால் அவள் சாருதத்தனைப் பார்க்க விழைந்து வருகிறாள்.

வழியில் சகாரன் என்ற ஒருவன் இவளைத் துரத்திவருகிறான். அவன் அந்த ஊர் ராஜாவின் மைத்துனன். ஆகையால் அதிகார திமிர் பிடித்து அலைகிறான். இவள் பேரில் மோஹம் கொண்டு இவளைத் தன் வசமாக்கப் பார்க்கிறான். ஆனால் இவள் சாருதத்தன் பேர் பிரியம் கொண்டு அவனையே விரும்புகிறாள் என்றறிந்து அவனது காமம் க்ரோதமாக மாறியது. அவளையும் சாருதத்தனையும் ஒழிக்க தீர்மானிக்கிறான்.

பிறகொரு முறை சாருதத்தனின் மகன் அழுது கொண்டிருப்பதை வஸந்தஸேனா பார்க்கிறாள். ஏனென்று அவனுடன் இருந்த தாதியைக் கேட்கிறாள். வஸந்தஸேனாவின் நற்குணத்தையும் சாருதத்தனுக்கு அவள் பெயரில் இருந்த பிரியத்தையும் அறிந்த அவள் கூறுகிறாள் “நேற்று இவன் நண்பன் ஒருவனது பொம்மையைக் கொண்டு விளையாடினான். அது தங்கத்தாலான சிறு வண்டி. ஆனால் இன்று அதைத் திரும்பக்கொடுத்தாயிற்று. இன்று வண்டி வேண்டும் என்றான். நான் மண்ணாலான வண்டியைச் செய்துகொடுத்தேன். ஆனால் தங்க வண்டி வேண்டும் என்று அழுகிறான்” என்று. அப்பொழுது வஸந்தஸேனா தனது ஆபரங்களைக் கழற்றிக் கொடுத்து “குழந்தாய், இந்த ஆபரணங்களால் தங்க வண்டி செய்து கொள்” என்கிறாள். ஆனால் இவை வீட்டிற்கு வந்தவுடன் சாருதத்தன் அவற்றை மைத்ரேயனிடம் கொடுத்து “இவை நமக்கு வேண்டா, வஸந்தஸேனாவிடம் திரும்பக் கொடுத்துவிடு” என்று அனுப்புகிறான்.

மறுநாள் வஸந்தஸேனா சாருதத்தனைப் பார்க்கவேண்டும் என்று மூடுவண்டியில் ஏறி செல்ல தீர்மானிக்கிறாள். ஆனால் வண்டிக்காரன் ஏதோ ஒன்றை மறந்துவிட்டதாகக் கூறி எடுத்துவரச் செல்கிறான். சிறிது நேரத்தில் திரும்ப வருகிறான். அப்பொழுது துஷ்டனான ராஜாவால் கைதுசெய்யப்பட்டு தப்பித்தோடிவந்த ஆர்யகன் என்பவன் அதனும் தஞ்சம் புகுகிறான். வண்டிக்காரன் ஆள் ஏறியாயிற்று என்று மட்டும் கவனித்து யாரென்று பார்க்காமல் வண்டியைக் கிளப்பிவிடுகிறான். வண்டி சாருதத்தன் வீட்டிற்குச் சென்றவுடன் சாருதத்தன் விஷயத்தை அறிந்து ஆர்யகனுக்கு உதவிசெய்ய தனது வண்டியையே அளித்து அவனை அனுப்பிவைக்கிறான்.

சிறிது நேரத்தில் வஸந்தஸேனா வண்டியில் ஏற வெளியே வருகிறாள். ஆனால் சாலையில் ஆர்யகனைத் தேடும் ராஜாங்க காவலாளிகள் மிகுதியால் ஒரே குழப்பமாகவுள்ளது. அந்த குழப்பத்தில் சகாரனுக்கு சொந்தமான மூடுவண்டியில் அறியாமல் ஏறிவிடுகிறாள். அது சகாரன் வீட்டிற்குச் செல்கிறது. சகாரனிடம் வஸந்தஸேனா அகப்பட்டு விடுகிறாள். இதுவே சரியான தருணம் என்றெண்ணி அவளைக் கொல்ல சகாரன் அவள் கழுத்தை நெரிக்கிறான். அவள் மூர்ச்சையடைந்து விழவே செத்துவிழுந்தாள் என்றெண்ணி சகாரன் மகிழ்ச்சியடைகிறான். உடனே இந்த பழியை சாருதத்தன் பேரில் போட்டு ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை சாதிக்க எண்ணுகிறான்.

அவ்வாறே சகாரன் நீதிமன்றத்திற்குச் சென்று “சாருதத்தன் வறுமையில் வாடுவதால் வஸந்தஸேனாவின் ஆபரங்களைத் திருடும் பொருட்டு அவளைக் கொன்றுவிட்டான்” என்று புகார் கூறுகிறான். அப்பொழுது நீதிபதி ஒரு காவல் அதிகாரியை அனுப்பி வஸந்தஸேனா உண்மையாகவே செத்துக்கிடக்கிறாளா என்று பார்த்து வரும்படி அனுப்புகிறான். சகாரனுக்கு வேண்டப்பட்ட அவன் சென்றுவந்ததாகக் காட்டி ஆம் என்று பொய் கூறுகிறான்.

சாருதத்தனை அழைத்து நீதிபதி உண்மையைச் சொல்லும்படி கூறுகிறார். வஸந்தஸேனா சாகவில்லை என்பதை அறியாத சாருதத்தன் சகாரன் கொலை செய்துவிட்டு தன்மேல் பழிபோடுகிறான் என்று மட்டும் புரிந்து கொண்டான். தன் பெயரில் வைத்த அன்பினால்தான் அவள் இறந்தாள் என்ற வருத்தத்தில் தானே அவள் மரணத்திற்குக் காரணம் என்று கூறிவிடுகிறான். இதற்குள் மைத்ரேயன் சாருதத்தன் பேரில் பழி உள்ளது என்ற விவரமறியாது வஸந்தஸேனாவைக் காணவில்லை என்று அவளது ஆபரணங்களுடன் சாருதத்தனைத் தேடிக்கொண்டு நீதிமன்றத்திற்கு வரவே சகாரனுக்கு அனுகூலமாயிற்று. “பாருங்கள் பாருங்கள் இந்த ஆபரணங்களுக்காகத்தான் கொலை செய்தான்” என்கிறான்.

சாருதத்தன் உண்மையில் இவ்வாறு தங்கத்திற்கு ஆசைப்பட்டு கொலை செய்திருக்கமாட்டான் என்பதை அறிந்த நீதிபதி சான்றுகள் ப்ரதிகூலமாக இருப்பதால் ஊரிலிருந்து கடத்தும்படி மட்டும் தண்டனையளிக்கிறார். ஆனால் மைத்துனனுக்கு பிரியம் செய்யவேண்டி அரசன் சாருதத்தனை வதம் செய்யும்படி தண்டனையை மாற்றுகிறான்.

இதற்குள் மூர்ச்சையடைந்திருந்த வஸந்தஸேனா எதேச்சையாக வந்த நண்பரொருவரின் உதவியால் உடல்நலம் தெளிந்து அவனைத் தேடிக்கொண்டு வருகிறாள். சாருதத்தன் மரண தண்டனை அளிப்பதற்குரிய இடத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறான். மக்கள் அனைவரும் இந்த தர்மாத்மாவுக்கு நேர்ந்த இந்த அவல நிலையைக் கண்டு கதறுகிறார்கள். சாருதத்தனின் மகன் "என்னை எடுத்துக்கொண்டு என் தந்தையை விடுங்கள்" என்று அழுகிறான். அப்பொழுது சாருதத்தன் மகனை அணைத்து முத்தமிட்டு தாயாரைப் பார்த்துக்கொள்ளும்படிச் சொல்லி மைத்ரேயனுடன் அனுப்பிவிடுகிறான். சாருதத்தனின் முடிவைக் கண்டு களிக்க சகாரன் அருகிலேயே நின்றுகொண்டிருக்கிறான்.

தண்டனையை நிறைவேற்றுபவன் கையினால் கத்தியை ஓங்கவே அது நழுவி கீழே விழுந்து விடுகிறது. இதற்குள் வஸந்தஸேனா சாருதத்தனிடம் ஓடி வருகிறாள். தண்டனையாட்களிடம் "என்னைக் கொன்றார் என்று கூறி இவருக்கு தண்டனை அளிக்கப்பட்டது. ஆனால் நான் சாகவில்லை. என்னைக் கொல்ல யத்தனித்து இவர் மேல் பழியைச் சுமத்தியவன் இந்த பாவிதான்" என்று சகாரனைச் சுட்டிக்காட்டுகிறாள். சகாரன் பயந்து ஓடுகிறான். ஆட்கள் அவனைத் துரத்தி ஓடுகிறார்கள்.

இதற்குள் ஆர்யகன் துஷ்டனான அரசனைக் கொன்று தானே அரசனாக முடிசூட்டிக்கொண்டுவிட்டான். தனக்கு உதவி செய்த நிரபராதியான சாருதத்தனின் மரண தண்டனையை நிறுத்த உத்தரவிடுகிறான். ஆனால் இதையறியாத சாருதத்தனின் மனைவி தனது கணவனை இழப்பதற்குள் தான் உயிரை விட எண்ணி தீயிலிறங்க யத்தனிக்கிறாள். இதைக் கேட்ட சாருதத்தனும் வஸந்தஸேனாவும் ஓடி வந்து அவளைக் காப்பாற்றுகிறார்கள். கணவனையடைந்து மகிழ்கிறாள் ஆர்யாதூதா. அவன் பேரில் உண்மையான அன்பு வைத்துள்ள வஸந்தஸேனாவையும் தனது தங்கையாக ஏற்கிறாள். குழந்தை ரோஹஸேனனுக்கும் மைத்ரேயனுக்கும் எல்லோருக்குமே மகிழ்ச்சி.

சகாரனை ஆட்கள் பிடித்து இழுத்து வருகின்றனர். இவனுக்கு என்ன தண்டனை அளிக்கவேண்டும் என்று மிகக்கோபத்துடன் ராஜாங்க அதிகாரி சாருதத்தனைக் கேட்கிறார். சகாரனோ உயிர் தப்ப வேறு வழியின்றி சாருதத்தனின் காலில் விழுந்து உயிர்ப்பிச்சை கேட்கிறான். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற குறள்படி சாருதத்தனும் அவனை மன்னித்துவிடுகிறான். பிறகு நல்லோர் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்.

ம்ருத் = மண், சகடிகம் = சிறிய வண்டி, குழந்தை ரோஹஸேனனின் பொம்மை வண்டி மண்ணாலானதாக இருந்தாலும் எப்படி விளையாட்டுக்குப் பயன்படும் தன் தன்மையை விடாதோ அது போல் சாருத்தத்தன் வறுமையில் இருந்தாலும் உலகிற்கு நல்லது செய்யும் தனது தன்மையை விடவில்லை என்பது குறிப்பு.

* * *